நாரா நாச்சியப்பன்

# பாசமுள்ள நாய்க்குட்டி



443

# பாசமுள்ள நாய்க்குட்டி

நாரா நாச்சியப்பன்

தமிழாலயம்
137, ஜானிஜான்கான் தெரு
சென்னை-600 014
தொலைபேசி: 833231

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | — | Pasamulla Naikutty |
| Author | — | Nara Nachiappan |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | June, 1988 |
| Paper used | — | 10.9 kg White printing. |
| Number of Pages | — | 76 |
| Number of Copies | — | 2000. |
| Printers | — | Novel Art Printers Madras-600014 Phone : 833231. |
| Price | — | Rs. 6-00 |
| Publishers | — | Thamizhalayam |
| | — | 137, Jani Jan Khan Rd· Madras-600014 |
| Subject | — | Short Stories for Children |
| Sellers | — | Ainthinai Pathippagam 279, Barathi salai Madras-600 005 |
| | | Paari Nilayam 184, Prakasam Road Madras-600 108. |
| | | Anand Publications 15, Theetharappan st. Madras-600 005. |

# முன்னுரை

இந்தப் புத்தகத்தில் எட்டுக் கதைகள் உள்ளன. எட்டும் சிட்டுச் சிட்டான கதைகள். சிறுவர் சிறுமியர் படித்து மகிழ அருமையான கதைகள்.

இந்த எட்டுக் கதைகளில், எழுதிய எனக்கு மிகப் பிடித்தமான கதை பாசமுள்ள நாய்க்குட்டிதான். அதனால் தான் இந்தப் புத்தகத்துக்குப் 'பாசமுள்ள நாய்க்குட்டி' என்று பெயர் வைத்தேன்.



எல்லாருடைய மனமும் ஒன்றுபோல் இருக்குமா? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பிடிக்கும். எனக்கு மஞ்சள் பிடித்திருந்தால் உனக்குச் சிவப்புப் பிடிக்கும், உன் தங்கைக்கு வெள்ளை பிடிக்கும், தம்பிக்குக் கருப்புப் பிடிக்கும். கதைகளிலும் அதுபோலத்தான்.

உங்களில் யாருக்கு எந்தக் கதை மிகப் பிடித்திருக்கிறது என்று எழுதுங் கள். அப்படி அந்தக் கதை பிடித்திரு பதற்கு என்ன காரணம் என்று எழுதுங் கள். அதை வைத்துக் கொண்டு நீங்கள் எப்படிப்பட்டவர் என்று நான் கண்டு பிடித்து விடுவேன்.

பார்க்கலாமா?

புத்தகத்தை முழுவதும் படித்தபிறகு, பதினைந்து காசுக்கு ஓர் அஞ்சல் அட்டை வாங்கி, அதில் உங்கள் கருத்தை எழுதியனுப்புங்கள்,

அனுப்ப வேண்டிய முகவரி :


தமிழாலயம்,

137, ஜானிஜான்கான் தெரு, சென்னை-600 014


நாரா நாச்சியப்பன்

# கதைகள்


1. பெருமை பேசிய பனிக் கட்டி 5

2. பாசமுள்ள நாய்க்குட்டி 12

3. ஏரிக்கரையில் பேய் 25

4. கோலபுரி ஊர்வலம் 34

5. கவலைக்கு மருந்து 51

6. பொன்வண்டு வறுவல் 58

7. முதற் பரிசு 64

8. செல்வ மகன் 69

# பெருமை பேசிய பனிக்கட்டி

ஒரு நாள் காற்று வலுவாக வீசியது. பல மரங்கள் சாய்ந்து விட்டன. ஊரெங்கும் ஓரே புழுதியாக இருந்தது. கொடிமரங்கள் அறுந்து போயின. மக்கள், பறவைகள், விலங்குகள் யாவும் வெளியில் நடமாட முடியாமல் தவித்தன.

காற்று நிமிர்ந்து பார்த்தது. "உலகத்தில் நான் தான் பெரியவன். எல்லாரும் எனக்குப் பணிந்து நடக்கவேண்டும்" என்று கூவியது.

ஆ! ஆ! ஆ!

திடீரென்று ஒரு சிரிப்பொலி கேட்டது.

"யார் சிரிப்பது?" என்று காற்று சினத்துடன் கேட்டது.

ஆஆ! ஆஆ! ஆஆ! என்று அந்தச் சிரிப் பொலி பெரிதாகியது.

"என்னைப் பழித்துச் சிரிப்பவன் எவன்? எதிரில் வா! பார்க்கிறேன்!" என்று கூச்ச லிட்டது காற்று.

வெள்ளை வெளேரென்று பனிக்கட்டி அதன் எதிரில் மலை போல் வந்து நின்றது.

"ஏ காற்றே! என்ன சொன்னாய்? உலகில் நீதான் வலுவானவனா? என்ன நெஞ்சுரம் உனக்கு? என்னைப்பற்றி உனக்குத் தெரி யாதா? உன்னைக் காட்டிலும் நான்தான் வலுவானவன்! இனிமேல் நீ வலுவானவன் என்ற எண்ணத்தையே விட்டு விடு!" என்று கூறி நிமிர்ந்து நின்றது பனிக்கட்டி.

"இல்லை, நான் தான் வலுவானவன். நீ என்முன் மண்டியிட்டு வணங்கு. இல்லா விட்டால் சும்மாவிட மாட்டேன்!" என்று சீறியது காற்று.

"என்ன? நான் உன்முன் மண்டி யிடுவதா? மூடக் காற்றே! இப்பொழுது நான் கூறுகிறேன் கேள். பேசாமல் என் காலடியில்

விழுந்து வணங்கு, உன்னை மன்னித்துவிடுகிறேன். இனிமேல் தற்பெருமை பேசாதே!'' என்று கூறியது பனிக்கட்டி!

''நான் தான் பெரியவன்! நீ தான் என்னை வணங்க வேண்டும்'' என்றது காற்று.

''இல்லை யில்லை. நீ தான் என்னை வணங்க வேண்டும். பேசாமல் அடங்கிப் போ'' என்றது பனிக்கட்டி.

இப்படி நெடுநேரம் இரண்டும் நான் தான் வலுவானவன். நான் தான் பெரியவன் என்று மாறி மாறிக் கூறிக் கொண்டிருந்தன.

கடைசியில் காற்று சொன்னது!

''நாம் வாதாடிக் கொண்டிருப்பதில் பயனில்லை. பகலவனிடம் போவோம். அவன் யார் பெரியவர்—வலுவானவர் என்று தீர்ப்புக் கூறட்டும்'' என்று கூறியது.

பனிக்கட்டியும் ஒப்புக் கொள்ளவே இரண்டும் பகலவனிடம் சென்றன.

''கதிரவனே! உண்மையைச் சொல். நான் தானே வலுவானவன்?'' என்று கேட்டது காற்று.

"பகலவனே, காற்றைக் காட்டிலும் நான் தான் வலுவானவன். இந்த உண்மையை நீ காற்றுக்கு எடுத்துக் கூறு" என்று கூறியது பனிக்கட்டி.

பகலவன் அவற்றைப் பார்த்துச் சிரித்தது.

"ஏன் வீண் சண்டை போடுகிறீர்கள். அசையும் தன்மையை வைத்துப் பார்த்தால் காற்றுத் தான் வலுவானது. அசையாத தன்மையைவைத்துப் பார்த்தால் பனிக்கட்டி தான் வலுவானது. உண்மை யிப்படி யிருக்க நீங்கள் ஏன் ஓயாமல் சண்டை போடுகிறீர் கள்?" என்று கேட்டது கதிரவன்.

"கதிரவனே நீ சொல்லது சரியல்ல. அசையாத பனிக்கட்டியை நான் அசைத்து விடுவேன்" என்றது காற்று.


"முடியாது! முடியவே முடியாது!" என்று கூறியது பனிக்கட்டி, கதிரவன் முன்னிலையி லேயே அவை மீண்டும் சச்சரவு செய்யத் தொடங்கின.

"உங்களுக்குள் ஏன் வீண் சண்டை? ஒரு போட்டி வைத்துப் பார்த்து விடலாமே!" என்று கூறியது பகலவன்.

"ஆம் ஆம்! போட்டி வைக்கலாம்" என்று இரண்டும் ஒப்புக் கொண்டன.

பகலவன் போட்டிக்கு விதி வகுத்தது.

பனிக்கட்டி ஓரிடத்தில் அசையாமல் நிற்க வேண்டும். காற்று தன் வலுவைக் கொண்டு அதை அசைக்க வேண்டும். அசைத்து விட்டால் காற்றுத்தான் வலுவானது என்று முடிவு செய்யலாம். அசைக்க முடியாவிட்



டால் பனிக்கட்டிதான் வலுவானது என்று தெரிந்து கொள்ளலாம்.

இந்தப் போட்டிக்கு இரண்டும் ஒப்புக் கொண்டன.

பனிக்கட்டி ஓரிடத்தில் மலை போல வளர்ந்து நின்றது. காற்று அதை நோக்கி வீசியது. ஓஓ வென்ற பேரிரைச்சலோடு காற்று மோதியது. காற்று வீச வீச பனிக்கட்டி இறுகியதே தவிர அசையவே யில்லை. காற்று தன் வலுவெல்லாம் சேர்த்து வீசியது. தன் ஆற்றலெல்லாம் கூட்டி ஆர்ப்பரித்தது. காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணிவரை தொடர்ந்து மோதியது காற்று. பனிக்கட்டி சிறிது கூட அசையவேயில்லை.

"பனிக்கட்டிதான் வலுவானது" என்று தீர்ப்புக் கூறிவிட்டுக் கதிரவன் மேற்குத் திசையில் மறைந்து விட்டது.

காற்று மனம் குன்றி ஒடுங்கிப்போய் விட்டது. அன்று இரவு முழுவதும் வெளியில் தலைகாட்டாமல் ஒடுங்கிப் போய் விட்டது.

மறுநாள் காலையில் கீழ்த்திசையில் தோன்றிய கதிரவன், பனிக்கட்டி போட்டியில் வெற்றி பெற்றதற்காகப் பாராட்டுத் தெரி வித்தது.

"நான் வலுவானவன் என்பதை நீ தரிந்து கொண்டாய் அல்லவா? இனி நீயும்

எனக்கு அடங்கித்தான் நடக்க வேண்டும்" என்று பகலவனைப் பார்த்துக் கூறியது பனிக்கட்டி.

கதிரவன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டது. வீண் பெருமை பாராட்டும் பனிக்கட்டிக்குச் சரியான சூடு கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டது. தன் கதிர்களைப் பனிக்கட்டியை நோக்கி நீட்டி விட்டது. நேரம் ஆக ஆகக் கதிர்கள் பனிக்கட்டியின் மீது பட்டு அதைத் துளைத்தன. கதிர்கள் படப் படப் பனிக்கட்டி கரைந்தது. மேலும் மேலும் கரைந்தது. கரைந்து கொண்டேயிருந்தது. கரைந்து கரைந்து மலைபோல நின்ற பனிக்கட்டி சிறு கூழாங்கல்போல ஆகி விட்டது.

அப்போது தான் பனிக் கட்டிக்கு அறிவு வந்தது.

கதிரவனின் காலில்விழுந்து வணங்கியது. "கதிரவனே! மன்னித்துவிடு, என்னை ஒரேயடியாகக் கரைத்து ஒழித்துவிடாதே! உலகில் நானும் வாழ இடங் கொடு" என்று கெஞ்சிக் கதறியது.

## கதிரவன் இரக்கங் காட்டியது.

“பனிக்கட்டியே கேள். இனி நீ வெறும் ஆர்ப்பாட்டம் செய்யாதே! உலகில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் உயர்ந்தவர்கள். எல்லாருக்கும் மேலாக நான்தான் உயர்ந்தவன் என்ற எண்ணத்தைக் கைவிட்டுவிடு. வீண் சண்டைக்கு வந்ததனால் உன்னை ஒழித்து விடநினைத்தேன். ஆனால், உன் அழுகையும், கெஞ்சலும் கண்டு மனம் இரங்குகிறேன். ஓர் ஆண்டில் நான்கு மாதம் மட்டும் நீ உலகில் நடமாட அனுமதி கொடுக்கிறேன். மீதி நாட்களில் இமயமலையின் மேல் போய்ப்படிந்து கொள். வெளியே தலைகாட்டாதே! உனக்கென்று ஒதுக்கப்பட்ட நான்கு மாதங்கள் பனிக்காலம் என்ற பெயரால் அமையும். அந்தக் காலத்தில் மட்டும் நீ உரிமையோடு உலகில் ஆட்சி செலுத்தலாம். மீதி நாட்களில் நீ அடங்கித்தான் கிடக்க வேண்டும். என்னையும் காற்றையும் எதிர்த்ததற்காக உனக்கு எட்டு மாத சிறைத்தண்டனை” என்று கூறிய கதிரவன் உச்சிநோக்கிச் சென்றது.

அதைப் பணிந்து வணங்கிவிட்டுப் பனிக்கட்டி இமய மலைக்குப் புறப்பட்டது.

அன்று முதல் அது வீண் சண்டைக்குப் போவதை விட்டுவிட்டது. தான் தான் உயர்ந் தவன் என்ற தற்பெருமையையும் விட்டு விட்டது.

## பாசமுள்ள நாய்க்குட்டி

எனக்குச் சின்ன வயதிலிருந்தே அழகான பறவைகள் விலங்குகள் என்றால் மிகப் பிடிக்கும்.

பச்சைக் கிளி, அணில், புறா, சிட்டுக் குருவி இவற்றைப் பார்க்கும் போது என் மனம் இன்பத்தால் துள்ளிக் குதிக்கும். பூனைக் குட்டிகளைக் கண்டால் எனக்கு மிகுந்த ஆசை. ஆனால் வீட்டில் பூனை வளர்க்கக் கூடாதென்று பெரியவர்கள் சொன்னதால் விட்டு விட்டேன்.

நாய்க்குட்டி ஒன்று தெருவில் கிடந்தது. அழகான நாய்க்குட்டி! அதை நான் வீட்டுக்குத் தூக்கி வந்தேன். அம்மா அதை வெளியே தூக்கி எறியும்படி கூறினாள். ஆனால் அப்பாதான், 'ஆசையாக இருக்கிறான்; வைத்துக் கொள்ளட்டுமே' என்றார்.

அந்த நாய்க்குட்டியை நான் அன்பாக வளர்த்து வந்தேன். அதற்குக் கண்ணன் என்று பெயரிட்டேன். ‘கண்ணா கண்ணா’ என்று அன்பாகக் கூப்பிடுவேன்.

முதன் முதலில் என் சிறுவயதில் நான் வளர்த்த அந்த நாய்க்குட்டி தெருநாய் இனத்தைச் சேர்ந்தது தான். ஆனாலும் எவ்வளவு அருமையான நாய்! அறிவுள்ள நாய்! நன்றியுள்ள நாய்! அதை இன்று நினைத் தாலும் எனக்குப் பெருமையாக இருக்கிறது. அது என் நண்பனைப் போல் பழகியது. என் குழந்தையைப் போல் வளர்ந்தது. காவல் வீரனைப் போல் கடமை ஆற்றியது. வீட்டுக்கு மிகப் பயன் உள்ள ஓர் உறுப்பாகி விட்டது.

வீட்டுக்கு உறவினர்கள் வந்தால் வாலை ஆட்டிக் கொண்டு அவர்களைச் சுற்றிச் சுற்றி வரும். குழந்தைகள் வந்தால் அவர்களோடு ஓடியாடி விளையாடும். வேற்று ஆட்கள் வந்தால் உறுமி உறுமிப் பாயும். பிச்சைக்காரர் கள், ஊர்க் காலிகள் யாரேனும் தெரு முனையில் வந்தால் கூட பெருங்குரல் கொடுத்துக் குரைக்கத் தொடங்கிவிடும்.

அதற்குரிய தட்டில் வைக்கும் உணவைத் தான் தின்னும். வேறு பொருள்களில் வாய் வைக்காது. மாலையில் நான் வெளியில் செல்லும் போது கூடவே ஓடிவரும்.

நீண்டநாட்கள் அது எங்கள் வீட்டில் இருந்தது. ஒருநாள் நோயுற்றுப் படுத்தது; கால் நடை மருத்துவரிடம் கொண்டு போய்க் காண்பித்தேன். மருந்துகளால் அதை ஒரு வாரம் வரைதான் காப்பாற்ற முடிந்தது. பிறகு அது இறந்து போய் விட்டது.

அந்த நாய் இறந்த பிறகு, வீடே வெறிச் சோடிப் போன மாதிரி இருந்தது. இழப் புணர்வு என்னைப் பெரிதும் ஆட்டிப் படைத்தது. என்னால் நீண்டநாள் இப்படி இருக்க முடியாது என்று தோன்றியது.

ஒரு நாள் பக்கத்து ஊருக்கு ஒரு நண்பன் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவன் வீட்டில் ஓர் உயர்ந்த சாதி நாய் இருந்தது. அது குட்டி போட்டிருந்தது. ஐந்து குட்டிகள். ஐந்தும் அழகான குட்டிகள். அவற்றை நான் விருப் போடு பார்த்துக் கொண்டிருந்தேன். உடனே அந்த நண்பன், அதில் ஒரு குட்டியை மட்டும்

வைத்துக் கொண்டு நான்கை விற்றுவிட இருப்பதாகக் கூறினான். நான் ஒன்றை விலைக்கு வாங்கிக்கொள்வதாகக் கூறினேன். அவன் விலை வாங்காமலே எனக்குத் தந்து விட்டான். அதை வளர்க்கும் முறைகளை விளக்கிச் சொன்னான்.

அந்த நாயையும் அன்பாக வளர்த்தேன். அது கண்ணனைப் போல் சாதுவல்ல. வேண்டாத ஆட்களைக் கண்டால் உறுமும், உறுமுவதைக் கண்டு அவர்கள் ஓடிப் போக வேண்டும். ஓடா விட்டால், இது பாய்ந்து கடித்துக் குதறி விடும். வீர முள்ள நாய். எனவே இதற்கு, நான் மிக மிக மதித்திருந்த வரலாற்று நாயகராகிய சிவாஜி மன்னரின் பெயரை வைத்தேன். சிவாஜி என்று கூப்பிட்ட வுடன் அது பாய்ந்தோடிவரும்! அப்போது அந்த மாவீரரைப் போலவே காட்சிதரும்.

சிவாஜி வந்த பிறகு நான் பழைய கண்ணனை மறந்துவிட்டேன் என்றே சொல்லலாம். அது எனக்கு மிக நெருங்கிய தோழனாகி விட்டது.

இறைவன் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்ததுபோல், நாய்களுக்குக் கொடுக்க வில்லை. அதிலும் அவை குறுகிய காலத்தில் இறந்து போகும்படியும் விதித்து விடுகிறான். அப்படித் தான். என் சிவாஜியும் தன் ஐந்தாவது வயதில் திடீரென்று நோய் உண்டாகி இறந்து விட்டது. சிவாஜியை இழந்து நான் தவித்த தவிப்பு சொல்லி முடியாது.

ஒரு நாள் அறிவழகன் என்ற என் நண்பன் வந்திருந்தான்.

சிவாஜி இறந்ததிலிருந்து நீ மிக மெலிந்து விட்டாய். நீ வேறொரு நாய்வாங்கி வளர்க் கலாம் என்றான்.

"வளர்த்து வளர்த்துச் சாகக் கொடுப்பது பெரிய வேதனையாக இருக்கிறது. யாராவது வளர்த்து விற்பதாக இருந்தால் வாங்கிக் கொள்ளலாம்" என்றேன் நான்.

நண்பன் தேடிப் பார்த்துச் சொல்லுவ தாகக் கூறிச் சென்றான்.

மூன்றாவது நாள் தொலை பேசி மணி யடித்தது. நண்பன் அறிவழகன் தான் பேசினான்.

“அழகான நாய், அறிவுள்ள நாய், உயர்ந்த சாதி நாய், நன்றாக வளர்ந்த நாய் ஒன்று விலைக்குக் கொடுக்கிறார்களாம், போய்ப் பார்த்து வாங்கிக் கொள்” என்று கூறி முகவரியை எழுதிக் கொள்ளச் சொன்னான்.

மறுநாளே நான் அந்த வீட்டுக்குச் சென்றேன். நாயைக் காட்டினார்கள், அப் படியே என் சிவாஜியைப் போலவே இருந்தது. அதே முகம், அதே கண்கள், அதே பார்வை, அதே சாதி, அதே உயரம் எல்லாம் அதுபோலவே! நிறம் தான்வேறு. என் சிவாஜி பழுப்பு நிறம் முதுகுப் பக்கம் மட்டும் திட்டாக வெள்ளை. இந்த நாய் வெள்ளை நிறம் காது களில் மட்டும் பாதி பாதி பழுப்பு நிறம்.


“இந்த நாய்க்கு என்ன பெயர் வைத் திருக்கிறீர்கள்?” என்று கேட்டேன்.

“சிவாஜி!” என்று சொன்னார்கள்,

வியப்பாய் இருந்தது. கேட்ட விலையைப் பேரம் பேசாமல் கொடுத்தேன். அன்போடு அதன் முதுகில் தடவிக் கொடுத்தேன்.

அந்த வீட்டுக்காரர் நாயை அழைத்துக் கொண்டுவந்து என் வண்டியில் ஏற்றி விட்டார். நானும் ஏறிக் கொண்டேன். வண்டி புறப்பட்டது.

நாய் பின்பக்கம் திரும்பிப் பார்த்தது. நானும் திரும்பிப் பார்த்தேன். அந்த வீட்டுக் காரர் வீட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தார்,



கதவோரத்தில் நின்ற அவர் மனைவி கண்களைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

என் அருகில் இருந்த நாய் அங்கேயே பார்த்துக் கொண்டிருந்தது. அவர்கள் வீடு கண்ணுக்கு மறைந்த பிறகும் கூட வண்டி வேறு சந்தில் திரும்பிய பிறகும் கூட, அதன் பார்வை திசைமாற வில்லை. என் வீட்டிற்கு வரும் வரையில் அதன் கழுத்து காரின் பின் பக்கம் திரும்பியபடியே இருந்தது.

நான் வண்டியை விட்டு இறங்கி வீட்டுக்குள் நுழைந்தேன். 'சிவாஜீ' என்று அழைத்தேன். வண்டியிலிருந்து குதித்து என் பின்னால் வந்தது.

நான் சாய்வு நாற்காலியில் போய்ச் சாய்ந்து கொண்டேன். புதிய சிவாஜி என்னைத் தொடர்ந்து வந்து அந்த நாற்காலி ஓரத்தில் படுத்துக் கொண்டது. அதன் கண்கள் வாசல் பக்கத்தையே பார்த்துக் கொண்டிருந்தன.

வேலைக்காரன் மோர் கொண்டுவந் தான், நாய் அழகாயிருக்கிறது என்று பாராட்டி னான். பிறகு நான் என் வேலைகளைப் பார்க்க வெளியில் சென்றேன் பகல் உண வுக்கு வீட்டுக்கு வந்தேன்.

சமையல்காரரை நோக்கி "நாய்க்கு ஏதாவது தின்னக் கொடுத்தீர்களா?" என்று கேட்டேன்.

"கொடுத்தேன்; அது தின்னவில்லை! தட்டில் வைத்தது அப்படியே இருக்கிறது!" என்றார் சமையால்காரர்.

நான் திரும்பிப் பார்த்தேன். நாயின் எதிரில் இருந்த தட்டில், பிசுக்கோத்துகள், சுட்ட உப்புக் கண்டத் துண்டுகள் வைத்தது வைத்தபடியிருந்தன. நாய் வாசற் கதவையே வெறித்துப் பார்த்துக் கொண்டு படுத்திருந்தது.

"ஒரு குவளை பால் கொண்டு வாருங்கள்" என்றேன். சமையற்காரர் கொண்டு வந்தார். தட்டில் ஊற்றி அதன வாயருகில் தூக்கிப் பிடித்தேன். அதன் நாக்கு வெளியில் வரவேயில்லை.

"சிவாஜி! சிவாஜி! பால்குடி" என்றேன். அது திரும்பிப் பார்க்கவேயில்லை.

மூன்று நாட்கள். அது படுத்திருந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவேயில்லை. எதையும் தின்ன வில்லை. கூப்பிட்ட குரலைக் கவனிக்கவே யில்லை,

பழைய வீட்டுப் பாசத்தை அது மறக்க வில்லை என்பதை நான் புரிந்துகொண்டேன்.

தொலை பேசியில் அந்த வீட்டுக்காரரை அழைத்தேன். "உங்கள் நாய் மூன்று நாட்களாக ஒன்றும் தின்னவில்லை. நீங்கள் கொஞ்சம் வருகிறீர்களா?" என்று அழைத் தேன்.

உடனே அவர் புறப்பட்டு வந்தார்.

வாசற் படியில் அவர் கால் வைத்தது தான். உடனே, சிவாஜி எழுந்து பாய்ந் தோடியது. வாலை யாட்டிக் கொண்டே அவரைச் சுற்றிச் சுற்றி வந்தது. முன் கால்களைத் தூக்கி யவர் மீது வைத்துக் கொண்டு நின்றது.

"இவ்வளவு அன்பான தோழனை ஏன் விற்க நினைத்தீர்களோ தெரியவில்லை. உங்கள் துன்பம் எதுவோ அதை நான் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. உடனே உங்கள் நாயை வீட்டுக்கு அழைத்துச் சென்று ஏதாவது தின்னக் கொடுங்கள்.

இங்கிருந்தால் அது இறந்து போகும்'' என்றேன்.

அவர் தலை குனிந்தார். வீதியை நோக்கி நடந்தார். சிவாஜி பின் தொடர்ந்தது.

ஒரு நல்ல பணி செய்த நிறைவு என மனத்தில் ஏற்பட்டது.

வந்தவரை வரவேற்று மோர் கூடக் கொடுத்து உபசரிக்காமல், சினந்து பேசி யனுப்பி விட்டேனே என்ற உணர்வு பிறகு தான் எனக்குத் தோன்றியது.

யாரிடமாவது நாய்க்குட்டி யிருந்தால் சொல்லுங்கள். நானே வளர்க்க ஆசைப் படுகிறேன்.

## ஏரிக்கரையில் பேய்

உடம்பெல்லாம் வேர்த்து விறுவிறுத்து மூச்சு முட்ட அந்தக் கிழவர் ஓடோடி வந்தார். ஏரிக் கரைக்கு பெர்ரிப் பழம் பறிக்கச் சென்றவர் சிறிது நேரத்தில் இப்படி ஓடி வந்தார். அவர் கண்களில் மருட்சி தெரிந்தது. எதையோ கண்டு பயந்து ஓடி வந்ததுபோல் இருந்தது. சிற்றூர் மக்கள் கூட்டம் கூடி விட்டனர்.

"தாத்தா! என்ன ஆயிற்று! ஏன் பயந்து ஓடி வருகிறீர்கள்?" என்று ஆளுக்கு ஆள் கேட்டார்கள்.

"பேய்! பேய்!" என்று கூவிய கிழவர் மூர்ச்சித்து மயக்கம் போட்டு விழுந்து விட்டார்.

அவர் முகத்தில் தண்ணீர் அடித்தார்கள். சற்று நேரத்தில் மயக்கந்தெளிந்து கண்விழித் தார்.

“பேய்! பேய்! என்னைக் கொத்தி விட்டது! காலைப்பாருங்கள்” என்றார் கிழவர்.

கால் சட்டை பொத்தல் பொத்தலாக இருந்தது. காலிலும் இரண்டொரு இடத்தில் ஊசி குத்தியதுபோல் இருந்தது. சிறிது இரத்தமும் வெளியில் வந்து காய்ந்திருந்தது.

“என் காலைப் பேய் கொத்தியது, கால் சட்டைகிழிந்து விட்டது! நான் உயிர் தப்பி ஓடிவந்து விட்டேன்!” என்றார் கிழவார்.

கிழவர் சொல்வதை யாராலும் நம்ப முடியவில்லை. பொதுவுடைமைக் கட்சிக் காரர்கள், புரட்சி அரசை ஏற்படுத்தி இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆட்சிக்கு வந்த வுடனேயே நாட்டில் இருந்த பேய்களை யெல்லாம், வெடிவைத்துச் சுட்டுப் பொசுக்கி விட்டார்கள். எல்லாப் பேய்களும் ஒழிந்து போய் விட்டன. இது வரை கடந்த இருபது ஆண்டுகளாக யாரும் பேய்கள் இருப்பதாகச் சொல்லவில்லை. அப்படி யிருக்க இந்தக் கிழவர் பேயைப் பார்த்ததாகச் சொல்லுவதை யார் நம்ப முடியும்?

மேலும் பேய்கள் இருந்ததாகக் கருதப் பட்ட பழைய காலத்தில் அவை மனிதர் களையோ மாட்டையோ அறைந்து கொன்ற தாகத் தான் கேள்விப் பட்டிருக்கிறோம். கொத்தியதாகவோ, கால் சட்டையைப் பொத்த தாகவோ கேள்விப் பட்டதில்லை. ஆகவே இந்தக் கிழவர் சொல்லுவதை நம்பமுடிய வில்லை என்று அந்த ஊர்க் கிழவிகள் கூறினார்கள்.

ஆனால், அன்று முதல் யாரும் ஏரிக் கரைக்குச் செல்லவில்லை. பெர்ரிப் பழம் பறிக்கும் வேலை நடைபெற வில்லை. சந்தையில் பெர்ரிப் பழம் கிடைக்க வில்லை.

பேய் என்றதும் எல்லோரும் பயந்து விட்டனர். ஆனால் பேய்களுக்குப் பயப் படுவதாகச் சொல்லிக் கொள்ள அவர்களுக்கு வெட்கமாக இருந்தது. ஆகவே, ஏன் பெர்ரிப் பழம் பறிக்க ஏரிக்கரைக்குப் போக வில்லை என்று கேட்டால், இந்த ஆண்டு பெர்ரிப் பழம் விளைய வில்லை. பழம் விளைந்தால் அல்லவா பறிக்கப் போகலாம் என்று பதில் கூறினார்கள்.

ஆனால் இந்தச் செய்தி நாளிதழ் ஆசிரியர்களுக்குக் கிடைத்தது. அவர்கள் செய்தியாளர்களை அந்தச் சிற்றூருக்கு அனுப்பினார்கள். புரட்சி ஏற்பட்டு இருபது ஆண்டுகள் கழித்து முதன் முதலாகத் தோன்றியிருக்கும் பேயைப்பற்றித் தெரிந்து செய்தி கொடுப்பதற்காகச் செய்தியாளர்கள் அந்தச் சிற்றூருக்குச் சென்றனர்.

பேயைக் கண்ட கிழவரை அவர்கள் பேட்டி கண்டார்கள். பேயை எங்கே கண்டார் என்று கேட்டார்கள். ஏரிக்கரையில் கண்டதாகக் கூறினார்.

"பேய் எப்படி இருந்தது" என்று கேட்டார்கள்.

"அது மனிதனைப் போலவும் இல்லை; பறவையைப் போலவும் இல்லை. அதன்குரல் பயங்கரமாக இருந்தது. அது விரட்டிக் கொண்டு வந்து என் காலைக் கொத்தியது. அது பாய்ந்து கொத்தியதில் என் கால் சட்டை பொத்தலாகிவிட்டது" என்றார் கிழவர்.

மறுநாள் செய்தியாளர்கள் கிழவரை யழைத்துக் கொண்டு ஏரிக்கரைக்குச்

சென்றார்கள். முதலில் வரமறுத்த கிழவர், துணைக்கு ஐந்தாறுபேர் வருவதால் சிறிது மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு புறப் பட்டார்.

பேய்கள் பகலில் உச்சி வேளையிலும், இரவிலும் தான் நடமாடும் என்பது பழைய காலத்துக் கருத்து. செய்தியாளர்கள் ஏரிக் கரை போய்ச்சேரும் போது மாலை நேரம். எனவே இரவுவரும் வரை காத்திருந்தார்கள். இரவுநெடுநேரம் வரை காத்திருந்தார்கள். பேயைச் சுடுவதற்குச் சுழல் துப்பாக்கிகள், புகைப் படம் எடுப்பதற்குப் புகைப்படப் பெட்டிகள், அதன் குரலை ஒலிப்பதிவு செய்வதற்கு பதிவுநாடாக் கருவிகள் எல்லாம் கொண்டு போயிருந்தார்கள்.

நெடுநேரம் வரை எந்தப் பேயும் வர வில்லை. எனவே, செய்தியாளர்கள் ஒவ் வொருவராக ஏரிக் கரையில் தூங்கத் தொடங்கிவிட்டார்கள்.

கிழவர் மட்டும் விழித்துக் கொண்டிருந் தார். ஆனால், தரையில் படுத்துப் போர்வை

யால் தலைமுதல் கால்வரை இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்தார். கண்களையும் மூடிக் கொண்டார். எல்லாரும் தூங்குகிற போது பேய்வந்து தன்னைக் கொத்தினால், யார் உதவிக்கு வருவார்கள் என்று நினைத்துப் பார்த்தபோது அவர் நெஞ்சு நடுங்கியது.

நடு நடுவில் கிழவர் போர்வையை நீக்கி வெளியில் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.


நள்ளிரவு நேரம். ஒரே இருட்டு. திடீரென்று ஏரியின் நடுவில் தண்ணீரில் யாரோ இரண்டு பேர் மோதிக் கொண்டு சண்டை போடுவது போன்ற ஓசை எழுந்தது. கிழவர் பயந்து துள்ளிப் பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்த செய்தியாளர் மேல் போய் விழுந்தார்.

"பேய்! பேய்!" கம்மலான குரலில் நடுக்கத்துடன் பேசினார்.

மற்ற செய்தியாளர்கள் எழுப்பப்பட்டனர். பெரிய ஒளிவிளக்குகள் ஏரியை நோக்கி ஒளி பெருக்கிப் பளிச்சிட்டன. ஏரியின் நடுவில் ஒரு பெரிய பறவை இறக்கைகளால்

நீரைப் படபட வென்று அடித்தபடி நீந்திக் கொண்டிருந்தது.

மஞ்சளும் சிவப்பு மான அதன் இறக்கைகள் நீர்ப்பரப்பை அடித்துக் கொண்டிருந்தன.



"பெலிகன், பெலிகன்" என்று ஒரு செய்தியாளர் கூவினார்.

உடனே மற்றொரு செய்தியாளர், "சென்றவாரம் நம் நாளிதழில் ஓர் அறிவிப்புப் போட்டிருந்தோமே! உயிர்க்காட்சி சாலையிலிருந்து ஒரு பெலிகன் பறவை தப்பியோடி

விட்டது. மஞ்சளும் சிவப்புமான இறக்கைகளுடன் கூடிய அந்தப் பறவை மனிதர்களை அடித்து வீழ்த்தும் ஆற்றல் உடையது. காண்பவர்கள் தகவல் கொடுக்க வேண்டும் என்று" என்றார்.

மறுநாள் காலையில் உயிர்க்காட்சி சாலைக்குச் செய்தி யனுப்பப் பட்டது. பெரிய வலைகளுடன் கூடிய சரக்குப் பேருந்தில் ஆட்கள் வந்து இறங்கினார்கள். சுற்றி வளைத்துக் கொண்டு அந்தப் பெலிகன் பறவையை வலைக்குள் விழும் படி விரட்டினார்கள். வலையில் அகப்பட்ட பறவை அதே சரக்குப் பேருந்தில் உயிர்க்காட்சி சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. புறப்படும்போது அந்தப் பெலிகன் பறவை, செய்தியாளர்களைப் பார்த்துச் சீறியது.

பேய்ப் பீதியைக் கிளப்பிவிட்ட கிழவருக்கு வீண் வதந்தியைப் பரப்பியதற்கான தண்டனை கிடைத்திருக்க வேண்டும்.

ஆனால், தப்பிச் சென்ற பறவையைப் பிடிப்பதற்குத் தகவல் கொடுத்ததற்கான பரிசு கொடுக்கப் பட்டது.

பரிசு கிடைத்த மகிழ்ச்சியில் அந்தக் கிழவர் "எல்லாம் நன்மைக்குத் தான்!" என்று கூறினார். இனிமேல் எக்காரணத்தைக் கொண்டும் இல்லாத பேய்களைப் பற்றிப் பேசமாட்டேன் என்று செய்தியாளர்களிடம் உறுதி கூறினார்.

பேயின் அச்சம் நீங்கிப் பெண்கள் ஏரிக் கரைக்குச் சென்றனர். மறுநாள் சந்தையில் பெர்ரிப் பழங்கள் கூடை கூடையாக வந்து இறங்கின.

## கோலபுரி ஊர்வலம்

கோலபுரி என்ற ஊரிலே வண்ணங்கி என்ற ஒரு மன்னன் இருந்தான்.

மன்னன் வண்ணங்கி எப்போதும் இன்பமாகவேயிருந்தான். அவனுக்குப் புதுப் புது ஆடைவகைகளை யணிவதில் விருப்பம் மிகுதி. காலையில் எழுந்தவுடன் ஓர் ஆடை யணிவான்; குளித்தவுடன் மற்றோர் ஆடை யணிவான்; அரசவைக்கு வரும்போது வேறோர் ஆடை அணிவான்; பகல் உணவுக்கு ஓர் ஆடை யணிவான்; பிற்பகலில் இன்னுமோர் ஆடை யணிவான்; நகர்வலம் வரும்போது ஒவ்வொரு வீதி கடந்ததும் ஓர் ஆடை மாற்றுவான். வேட்டைக்குச் சென்றால் அதற்கென்று ஓர் ஆடை; நீதிவிசாரணையின் போது மற்றோர் ஆடை. இப்படி அவன் ஒரு நாளைக்கு இருபது ஆடை மாற்றுவான்.

முதல் நாள் உடுத்திய ஆடையை மறுநாள் பயன்படுத்த மாட்டான். அவனுடைய பணம் முழுவதும் ஆடைக்காகவே செலவிட்டான். அவனுடன் நெருங்கிப் பழகுவோர், அவன் புதிதுபுதிதாகப் பூணும் உடைகளின் அழகைப் புகழுவார்கள். அவர்களுக்கு உடனே பரிசு, அல்லது பதவி கிடைக்கும்.

கோல புரிக்கு ஒரு நாள் மூன்று ஆட்கள் வந்தார்கள். ஏமாற்றிப் பிழைப்பதே அவர்கள் தொழில். நாடுநாடாகச் சென்று பெரிய மனிதர்களோடு பழகி அவர்களை ஏமாற்றிப் பணம் பறித்துப் பறித்துப் பழகியவர்கள்.

பத்தன், சித்தன், முத்தன் என்ற பெயருடைய அந்த எத்தர்கள் மூவரும் கோலபுரி ஊரைச் சுற்றிப் பார்த்தார்கள். அரசாங்க அதிகாரிகள், மக்கள் ஆகியோரிடம் அந்த அரசனைப்பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார்கள்.

ஆடைப் பைத்தியம் பிடித்த அரசனை ஏமாற்றிப் பணம் பறிக்க ஒரு திட்டம் தீட்டி னார்கள்.

ஒருநாள் அவர்கள் அரசனைப் பார்க்க அரண்மனைக்குச் சென்றார்கள்.

பத்தன் தான் துணி நெய்வதில் வல்லவன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான்

சித்தன் தான் ஆடை தைப்பதில் சூரன் என்று சொல்லிக் கொண்டான்.

முத்தன் தான் சாயங் கொடுப்பதில் தலை சிறந்தவன் என்று கூறினான்.

'நாங்கள் மூவரும் சேர்ந்து உருவாக்கும் ஆடையைப் போல் இந்த உலகத்தில் இதுவரை யாரும் செய்ததில்லை' என்று மூவரும் கூறினார்கள்.

'அரசே, தாங்கள் விரும்புவீர்களானால், தங்களுக்கு ஓர் அதிசயமான மாய ஆடையை நாங்கள் உருவாக்கித் தருகிறோம். துணியின் தரத்திற்கோ தையல் வேலையின் திறத்திற்கோ, அதற்குக் கொடுக்கும் வண்ணச் சாயத்தின் அழகுக்கோ ஈடாக நீங்கள் எதையும் காண முடியாது. இந்த அதிசயமாய ஆடையின் தன்மை என்ன வென்றால்,

தன் கடமையைச் சரிவரச் செய்யாத ஒரு வனோ, ஓர் அறிவற்ற முட்டாளோ பார்ப்பா னாயின் இந்த ஆடை அவன் கண்ணுக்குத் தெரியாது. கண்ணால் பார்த்தவர்களோ அதன் அழகையும், திறத்தையும், நிறத்தையும் வியந்து பாராட்டிக் கொண்டேயிருப்பார்கள்.

'அரசே இப்படிப்பட்ட ஆடையொன்று தங்களுக்குத் தேவையா; அப்படியானால் எங்களுக்குக் கட்டளை யிடுங்கள்' என்று அவர்கள் கேட்டார்கள்.

''விந்தையான அந்த ஆடையைப்பற்றி நீங்கள் சொல்லும்போதே என் சிந்தையைக் கவர்கின்றதே! நிச்சயமாக நான் அந்த ஆடையை அணிந்து கொள்ளவிரும்புகிறேன்.

''கலைஞர்களே, உங்கள் கூட்டு முயற்சி யால் உருவாகும் ஆடையை அணிந்து கொண்டு நான் நகர்வலம் வர விரும்புகிறேன். உங்களுக்கு எத்தனை பொன் வேண்டுமோ வாங்கிக் கொள்ளுங்கள். நாளைக்கே வேலையைத் தொடங்குங்கள். ஒரு வாரத்தில் உங்கள் ஆடையை எதிர்பார்க்கிறேன்'' என்றான் கோலபுரி அரசன் வண்ணங்கி.

அந்த எத்தர்கள் அரசனிடம் ஆயிரம் பொன் அச்சாரமாக வாங்கிக் கொண்டார்கள். அன்றே கடைத் தெருவுக்குச் சென்று ஒரு கைத்தறியும், ஒரு தையற் பொறியும், ஓர் அடுப்பும், சாயங் காய்ச்சுகிற பானையும் வாங்கிக் கொண்டு வந்தார்கள். அவர்களுக் கென்று ஒதுக்கப்பட்ட கூடத்தில் இவற்றைக் கொண்டு வந்து இறக்கினார்கள்.

முதல் இரண்டு நாட்கள் பித்தன் கைத்தறி யில் நூல் இல்லாமலே வேலை செய்து கொண்டிருந்தான். சித்தனும் முத்தனும் உதவி புரிவதுபோல் பாவனை செய்து கொண்டிருந் தனர்.

அடுத்த இரண்டு நாளும் சித்தன் தையற் பொறியை ஓட்டிக் கொண்டிருந்தான். துணி யில்லாமலே, தையற்பொறி வேலை செய்து கொண்டிருந்தது. பித்தனும் முத்தனும் தூக்கிப் பிடித்துக் கொள்வது, போலவும் எடுத்துக் கொடுப்பது போலவும் நடித்துக் கொண்டிருந்தனர்.

மற்ற இரண்டு நாட்களும், முத்தன் சாயப்பானையில் தண்ணீர்ஊற்றிக் கொதிக்க

வைத்துக் கொண்டிருந்தான். வெறுங் கையினால் துணியைச் சாயத்தில் நனைப்பது போலவும் காயப் போடுவது போலவும், பாசாங்கு செய்து கொண்டிருந்தனர்.

ஏழாவது நாள் மன்னன் வண்ணங்கி தனக்காக உருவாகியுள்ள ஆடையைப் பார்த்துவரப் புறப்பட்டான். அரசமண்டபத் திலிருந்து இரண்டுபடி கீழிறங்கிய பிறகுதான், மன்னனாகிய தானே போவது தன் தகுதிக்கு ஏற்றதல்ல என்று எண்ணித் தன் அமைச்சர் களில் ஒருவரைக் கூட்டிவரும்படி ஆளனுப்பி னான்.

அந்த அமைச்சர் போய்ப் பார்த்துவந்தால் ஆடையைப் பற்றி அறிந்து கொள்வதோடு, அவர் கடமை தவறாதவரா? அறிவாளியா என்பதையும் ஐயமறத் தெரிந்து கொள்ள லாமே என்று அரசன் எண்ணினான்.

அரசன் கட்டளைப்படி அமைச்சர் புதிய ஆடையைப் பார்த்துவரப் புறப்பட்டார்.

அமைச்சர் தங்கள் கூடத்தை நோக்கி வருவதைக் கண்ட எத்தர்கள் எச்சரிக்கை

யானார்கள். எப்படி நடிக்க வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள்.

அமைச்சர் கூடத்திற்குள் நுழைந்தவுடன், அவருக்கு ஒரு நாற்காலி போட்டு உட்கார வைத்தார்கள். மூன்று பேரும் அடக்கஒடுக்க மாக வணங்கி நின்றார்கள்.

'ஆடை உருவாக்கி விட்டீர்களா?' என்று அமைச்சர் கேட்டார்.

பெருமானே, இதோ எடுத்துவருகிறோம் என்று மூன்று பேரும் கிளம்பினார்கள். ஒரு மேசையின் மேல் மடித்து வைத்துள்ள ஆடையை எடுத்து விரிப்பது போல், பத்தன் நடித்தான். விரித்துப் பிடித்த போது தரையில் பட்டுவிட்ட துணியைத் தூக்கிப் பிடிப்பது போல் சித்தன் நடித்தான். காற்றில் பறந்துவந்த தூசி துணியின் மேல் பட்டது போல அதை அங்கங்கே தட்டிவிடுவது போல் நடித்தான் சித்தன்.

அமைச்சர் கண்ணுக்கு இவர்களுடைய நடிப்புத் தெரிந்ததே தவிர துணி தெரியவே இல்லை. துணியிருந்தால் அல்லவா தெரியும்!

அமைச்சர் சிந்திந்தார். துணி கண்ணுக்குத் தெரியவில்லை என்று சொன்னால், அரசர் தான் கடமை தவறியவன் என்றோ, அறிவற்ற முட்டாள் என்றோ எண்ணிவிடக், கூடும். ஆகவே, தான் உடையைப் பார்த்த தாகவே காட்டிக் கொள்ள வேண்டும் என்று மனத்துக்குள் முடிவு செய்து கொண்டார்.

"பெருமானே, துணிஎப்படியிருக்கிறது?" என்று கேட்டான் பத்தன்.

"தளதள வென்று பட்டுப் போல் இருக்கிறது" என்றார் அமைச்சர்

"தையலைப் பற்றித் தாங்கள் ஒன்றும் சொல்ல வில்லையே!" என்று வினவினான் சித்தன்.

"சீராக இருக்கிறது!" என்றார் அமைச்சர்.

"பெருமானே துணியின் நிறம் எப்படியிருக்கிறது?" என்று கேட்டான் முத்தன்.

"பொன்னின் வண்ணம் தான்!" என்று அமைச்சார் பராட்டினார்.

தங்கள் சூழ்ச்சியில் அமைச்சர் சரியாக ஏமாந்து விட்டார் என்று எத்தர்கள் தெரிந்து கொண்டார்கள்.

"பெருமானே! உடையின் சிறப்பைப் பற்றி அரசரிடம் எடுத்துக் சொல்லுங்கள். முதலில் இந்த உடையை நாங்களே எடுத்து வந்து அரசருக்கு எங்கள் கைகளாலேயே அணிந்து விட விரும்புகிறோம்" என்றார்கள்.

"அப்படியே செய்யலாம்!" என்று கூறி அமைச்சர் அரசவை மண்டபத்திற்கு வந்தார்.

அங்கே அரசர் ஆவலோடு காத்திருந்தார்.

அமைச்சரைக் கண்டவுடனே, "எப்படி யிருக்கிறது!" என்று கேட்டார்.

அமைச்சர் அந்த உடையைப் பற்றிப் பெரிதாகப் புகழ்ந்து பேசத் தொடங்கினார்.

"பட்டினும் சிறந்த பளபளப்பு! பொன்னி னும் சிறந்த வண்ணம்! இதுபோன்ற எடுப்பான உடையை நான் இதுவரை பார்த்ததே யில்லை என்று அமைச்சர் அளந்து கொட்டினார். இதைக் கேட்ட அரசன் மற்றும்

ஓர் ஆயிரம் பொன் அந்தக் கலைஞர்களுக்கு வழங்கும்படி கட்டளையிட்டான்.

அவையில் இருந்தவர்கள் இதைக்கேட்டு வியப்படைந்தனர். ஊரெங்கும் இந்த உடையைப் பற்றியே பேச்சாய் இருந்தது.

ஊர்மக்கள் இந்த விந்தையான உடையில் அரசரைப் பார்க்க விரும்புவதால் மறு நாளே ஊர்வலம் ஒன்றுக்கு ஏற்பாடுசெய்தார்கள் அமைச்சர் அவையினர்.

மறுநாள் ஊர்வலத்துக்குத் தான் அணிந்து கொள்ளப்போகும் அந்த உடையை, முன்னாலேயே பார்க்க வேண்டும் என்று அரசன் துடித்தான். ஆனால் தன் அவசரத்தை வெளியில் காட்டிக் கொள்ள அவன் விரும்ப வில்லை.

நள்ளிரவு நேரம். அரசன் வண்ணங்கி தன் படுக்கையிலிருந்து எழுந்தான்.

ஒரு காவல்வீரன் போல் மாறுவேடம் போட்டுக் கொண்டான். கலைஞர்கள் இருக்கும் கூடத்திற்குச். சென்றான். அந்த எத்தர்கள் மூன்று பேரும் நன்றாகக் குறட்டை விட்டுத் துங்கிக் கொண்டிருந்தார்கள்.

அரசன் வண்ணங்கி கூடம் முழுவதும் தேடிப் பார்த்தான். அங்கிருந்த மேசையிழுப்பு கள் பெட்டிகள், அலமாரித் தட்டுகள் எல்லாம் திறந்து பார்த்தான். எதிலும் உடையைக் காணவில்லை. அவர்களை எழுப்பிக் கேட்கலாமா என்று எண்ணினான். பிறகு, சரி காலையிலேயே பார்த்துக் கொள்ளலாம், என்று தன் படுக்கை யறைக்குத் திரும்பிவந் தான்.

காலையில் அரசன் நீராடி முடிந்தபின், அந்த எத்தர்கள் மூவரும் அலங்கார மண்டபத்துக்கு அழைத்துவரப் பட்டனர். அவர்கள் கையில் ஒரு ஓலைப்பெட்டி யிருந்தது. அதை மிகப்பத்திரமாகப் பத்தன் தூக்கிக் கொண்டு வந்தான்.

அரசனை அந்த எத்தர்கள் ஒரு நாற் காலியில் உட்காரவைத்தனர். அவன் அணிந் திருந்த ஆடைகளை யெல்லாம் கழற்றினர். தங்கள் கொண்டு வந்திருந்த ஓலைப்பெட்டி யைத் திறந்தனர். அரசன் ஆவலோடு பெட்டிக்குள் எட்டிப் பார்த்தான். அதில் ஒன்றுமே இல்லை. ஆனால் அதில் ஒரு

மென்மையான பட்டுத்துணி யிருப்பதுபோல வும், அதை மிகப் பக்குவமாக எடுப்பது போலவும் நடித்தான் பத்தன். அதைவிரித்துப் பிடிப்பதுபோல் நடித்தான் சித்தன். அதை அரசருக்கு அணிவிப்பது போல நடித்தான் முத்தன். பிறகு மூவரும் சேர்ந்து அங்கங்கே



சுருக்கங்களை நீக்கி யிழுத்து விடுவதுபோல வும், உடலில் பொருத்தி விடுவது போலவும் அபிநயங்கள் செய்தனர். அப்போது முதல் நாள் ஆடையைப் பார்க்கச் சென்ற அமைச்சர் உள்ளே நுழைந்தார். அம்மணமாக இருக்கும் அரசரைப் பார்த்தார். கடமையைச் சரியாகச்

செய்யாத தன் கண்ணுக்குத்தான் ஆடை தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டு, வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல் "மன்னர் பெருமானே, இந்த உடையில் நீங்கள் இந்திரன் போல் இருக்கிறீர்கள்!" என்று பனிக்கட்டி போன்ற குளிர்ந்த சொற்களால் புகழ்ந்துரைத்தார்.

அரசன் கண்ணுக்குத் துணியும் தெரியவில்லை; அதன் வண்ணமும் தெரியவில்லை. அவன் இவ்வாறு நினைத்தான்: குடிமக்களுக்கு என் கடமையை நான் சரியாகச் செய்யவில்லை என்று நினைக்கிறேன். என் கடமையை நினைவு படுத்தவே கடவுள் இந்தக் கலைஞர்கள் மூலம் இந்த மாய ஆடையை அனுப்பியிருக்கிறார். ஆனால், நாமாகப் பேரைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டு, "அமைச்சரே இது மிக விந்தையான ஆடைதான்!" என்றான்.

எத்தர்கள் அரசனுக்கு ஆடையணிவிக்கும் சடங்கு முடிந்தவுடன் ஊர்வலம் புறப்பட ஏற்பாடாகியது.

அழகாக அலங்கரிக்கப்பட்ட தேர் ஒன்றில் அரசன் நின்று கொண்டான். அமைச்சர்கள் படை வீரர்கள், அரண்மனை யாட்கள் தொடர தேர் புறப்பட்டது. வீதிகளில் மக்கள் வெள்ளம் வெள்ளமாகக் கூடியிருந்தார்கள்.

அம்மணக் கோலத்தில் அரசன் தேர்த் தட்டின் மீது நின்றபடி ஊர்வலம் வந்தான். பார்த்த ஒவ்வொருவரும், தான் அறிவற்ற முட்டாளாய் இருப்பதாலோ, கடமை தவறிய தாலோ அரசனின் ஆடை தன் கண்ணுக்குத் தெரியவில்லை என்று எண்ணிக் கொண்டான.

ஆனால், தன்னை முட்டாளாக வெளிக் காட்டிக் கொள்ளக் கூடாது என்பதற்காக, "மன்னர் இந்த ஆடையில் மிக அழகாக இருக்கிறார்!" என்று ஒவ்வொருவனும் பக்கத்தில் இருப்பவனிடம் சொன்னான். பக்கத்தில் இருப்பவனோ, அவனுக்கு அழகாகத் தோன்றும் அரசர் தனக்குமட்டும் அம்மணமாகத் தோன்றுவதால் தன்னை முட்டாளாக எண்ணிக் கொண்டான். ஆனால் தன்னைத்தானே முட்டாள் என்று சொல்லு

வது சரியல்ல என்று அவனும், "ஆம்! ஆம்! மிகமிக அழகாக இருக்கிறார்!" என்று கூறினான்.

இவ்வாறு ஆண் பெண் அனைவரும், அம்மணக் கோலத்தில் ஊர்வலம் வரும் அரசனைப் பார்த்து, அவன் ஆடையின் அழகைப் பாராட்டுவதாகப் போலித் தனமாகப் பாராட்டிப் பேசிக் கொண்டனர்.

முதல் அமைச்சரின் வீட்டுக்கு அருகில் தேர் வந்தது. முதலமைச்சரின் மனைவி, அரச ஊர்வலத்தைப் பார்ப்பதற்காகத் தன் குழந்தை யுடன் உப்பரிகையின் மீது வந்து நின்றாள். அந்தக் குழந்தைக்கு ஐந்து வயது இருக்கும். சுடர்க்கொடி என்ற பெயருடைய அந்தப் பெண்குழந்தை சுட்டித்தனத்துக்கும் சுறுசுறுப் புக்கும், அறிவுநுட்பத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்கியது. ஐந்து வயதில் அது கேட்கும் கேள்விகள் அறிவுக்கு விருந்தாய் இருக்கும்.

சுடர்க் கொடி உப்பரிகையின் மீது வந்து நின்றதும் அரச ஊர்வலத்தை நோக்கினாள்.

அரசரை நோக்கினாள். அம்மணக் கோலத்தில் அரசர் தேர்த் தட்டில் நிற்பதைக் கண்டாள்.

அவள் அரசரை நோக்கிக் கூவினாள். "வெட்கம்! வெட்கம்! மன்னரே ஏன் அம்மணமாக இருக்கிறீர்கள்! உங்கள் ஆடையெல்லாம் எங்கே போயிற்று!" என்று கூச்சலிட்டுத் தன் கண்களை மூடிக் கொண்டாள்.

சுடர்க் கொடி அறிவுமிக்க குழந்தை என்பது அரண்மனை வாசிகள் எல்லாருக்கும் தெரியும். அவள் முட்டாள் தனமாகப் பேச மாட்டாள் என்பதும் தெரியும்! அவள் கூறிய உண்மையைக் கூறியதும் அங்கங்கே வீட்டு வாசல்களிலும் பலகணிகளிலும், உப்பரிகைகளிலும், வீதி ஓரங்களிலும், நின்று கொண்டிருந்த பெண்கள் கண்களை மூடிக் கொண்டு ஓடி ஒளிந்தார்கள்.

தம்மைத் தாமே முட்டாளாக எண்ணிக் கொண்டு அறிவாளிகளாக நடித்த ஆண்கள் உண்மையிலேயே முட்டாளாகிவிட்ட தங்கள் நிலையைக் கண்டு நாணித் தலைகுனிந்தார்கள்.

அரசன் தன்னைத் தானே நிர்வாணமாக்கிக் கொண்டு ஊர்வலம் வந்து விட்ட அவலத்தை எண்ணி மனம் குன்றிப் போனான்.

அங்கங்கே நிற்கும் மக்கள் தன் மூடத் தனத்தைப் பற்றிக் குசுகுசு வென்று கமுக்கமாகப் பேசிக் கொள்வதைப் பார்த்து வெட்கித் தலை குனிந்தான். வேக வேகமாகத் தேரைத் திருப்பி அரண்மனைக்குக் கொண்டுவரச் சொல்லித் தன் அறைக்குச் சென்று ஆடையணிந்து கொண்டான்.

தன்னை ஏமாற்றிய எத்தர்களைப் பிடித்து வரும்படி கட்டளையிட்டான். ஆனால், அவர்கள் நிலைமை மாறிவிட்டதை யுணர்ந்து கூட்டத்துக்குள் கலந்து மறைந்து ஊரை விட்டு ஓடி விட்டார்கள்.

## கவலைக்கு மருந்து

தங்கபுரி என்று ஓர் ஊர் இருந்தது. அந்த ஊரில் வளவனார் என்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். வளவனார் சிறந்த பண்புநலம் உடையவர்; பெருஞ் செல்வர்; நல்ல அறிஞருங்கூட. தங்கபுரியில் அவர் செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்து வந்தார்.

வளவனார் உழைப்பினால் உயர்ந்தவர். சிறுவயதில் பாடுபட்டு உழைத்துப் பெருஞ் செல்வராக முன்னுக்கு வந்தவர்.

வாழ்க்கையில் பல துன்பங்களை அனுபவித்தவர். அதேபோல் உயர்ந்த இன்ப வாழ்வையும் அடைந்தவர்.

வளவனார், சுறுசுறுப்பானவர்; நல்ல உழைப்பாளி. அதனால் அவர் நோயென்று படுத்ததே கிடையாது.

அவருக்கு எண்பதாவது வயது நடக்கும் போது ஒரு நாள் காய்ச்சல் என்று படுக்க நேர்ந்தது. மூன்று நாட்களில் அந்தக் காய்ச்சலும் பறந்துவிட்டது. மிகுதியாக உழைத்து, அளவோடு உண்டு, நல்வழியில் நடந்து வருபவர்களுக்கு நோய் நொடிகள் வருவதில்லை, வந்தாலும் எளிதாக மறைந்து போய்விடும்.

காய்ச்சலாகப் படுத்திருந்த அந்த மூன்று நாட்களில் அவருக்கு ஒரு பயம் தோன்றியது.

தனக்கு வயதாகிவிட்டது. இனி நெடு நாட்கள்உயிருடன் இருக்க முடியாது.எனவே, அதற்குமுன் தன் ஒரே மகனைப் பொறுப்பும் தகுதியும் உள்ளவனாக ஆக்கிவிட வேண்டும் என்று எண்ணினார்.

காய்ச்சல் நோயிலிருந்து விடுபட்டு, உடல் நலம் அடைந்த பிறகு ஒரு நாள் அவர் தன் மகனைக் கூப்பிட்டார்.

"அன்பு மகனே! எனக்கு வயது மிகுந்து விட்டது. இன்னும் சில ஆண்டுகள்தான் நான் உயிரோடு இருப்பேன். அதற்குள் நீ

பொறுப்புள்ளவனாய் வளர வேண்டும். என்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் மேற்பார்த்துக் காப்பாற்றிவைத்துக் கொள்ள உனக்கு உலக அனுபவம் வேண்டும். அவ்வப் போது நிலைமைக்கு ஏற்ப முடிவு எடுக்கும் திறமையை நீ பெற வேண்டும். ஆகவே மகனே நீ இப்போது உலகப் பயணம் மேற் கொள். உலகில் உள்ள பல நாடுகளுக்கும் சென்று உலக அனுபவம் பெற்றுவா. எங்கு சென்றாலும் நீ தங்கியிருக்கக் கூடிய புகலிடங் களை உண்டாக்கிக் கொள். அப்போது தான் உனக்குக் கவலை ஏற்படும்போதோ, வேறு தேவையுண்டாகும் போதோ அவை பயனுள்ளவையாக இருக்கும்'' என்று கூறினார்.

மகனும் நிறையப் பணம் பெற்றுக் கொண்டு உலகச் சுற்றுப்பயணம் புறப் பட்டான்.

பேருந்துகளிலும், சிற்றுந்துகளிலும், புகை வண்டிகளிலும், மின்வண்டிகளிலும் கபபல்களிலும், வானூர்திகளிலும் தன் விருப்பம் போல் அவன் பல நாடுகளுக்கும் சென்றான். பலவகையான மொழிபேசும்,

பல வகையான பழக்க வழக்கங்கள் உடைய மக்கள் அனைவரோடும் பழகினான். ஆங்காங்கேயுள்ள அழகிய, விந்தையான பல காட்சிகளையும் கண்டுமகிழ்ந்தான். ஆடம்பர மான உணவு விடுதிகளில் தங்கினான்.


ஒவ்வொரு நாட்டிலும் தனக்குப் பிடித்த மான ஊர்களில், மனை வாங்கி அழகான பெரிய மாளிகைகளைக் கட்டினான். அந்த மாளிகைகளைச் சுற்றி அழகிய பூங்காக்களை அமைக்கச் செய்தான். தான் எப்பொழுது சென்றாலும் வரவேற்கக் கூடிய மேற்பார்வை யாளர்களை ஏற்படுத்தினான். ஏறத்தாழ ஐம்பது நாடுகளில் அவனுடைய மாளிகைகள் இருந்தன.

கடைசியில் அவன் உலகப் பயணத்தை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பி வந்தான்.

தந்தை அவனை அன்போடு வரவேற்றார். அவனுடைய உலகப் பயணம் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொண்டார். ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் மகன் விரிவாகக் கூறக்கேட்டு மகிழ்ந்தார்.

கடைசியில் அவர் மகனைக் கேட்டார். மகனே, நீ உனக்குக் கவலை ஏற்படக் கூடிய காலத்தில் புகலடையக் கூடிய இடங்களை உண்டாக்கிக் கொண்டாயா?

"ஆம் அப்பா. அழகான மலைச்சாரல்களிலும், ஆற்றங்கரைகளிலும், தென்னந் தோப்புகளின் இடையிலும் மனைகளை



வாங்கி புதுப்புது மாதிரிகளில் பலமாளிகைகளைக் கட்டியிருக்கிறேன். கோடையின் துன்பத்தைப் போக்கிக் கொள்ள மேலை நாட்டு மாளிகைகளில் ஒன்றில் போய் இருக்கலாம். வாடைக் காலத்தில் கீழை நாடுகளில் உள்ள ஒரு மாளிகையில் இருக்கலாம். இப்படி ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு

நாட்டு மாளிகை ஏற்றதாய் இருக்கும். இயற்கையாக உள்ள இந்த வசதிதவிர எந்தக் காலத்திலும் செயற்கையாக, இந்த வசதி களைத் தரக்கூடிய அமைப்புள்ள மாளிகை களையும் கட்டியிருக்கிறேன். பருவத்துன்பங் களைப் பற்றியே கவலைப்படத் தேவை யில்லை'' என்றான் அந்த அன்பு மகன்.

பருவங்களைப் பற்றி மகன் பேசப் பேச அப்பா புருவங்களை உயர்த்தி வியப்புடன் மகனைப் பார்த்தார்.

''அன்பு மகனே, நீ இன்னும் என் மனக் கருத்தைப் புரிந்து கொள்ள வில்லை. நீ கட்டியுள்ள மாளிகைகள் பருவகாலத் துன்பங் களுக்கு வேண்டுமானால் ஈடு கொடுக்கலாம். ஆனால், மனிதனுக்கு ஏற்படக் கூடிய மனக் கவலைகளுக்கு மருந்தாக மாட்டா.

''எந்த நாட்டுக்குச் சென்றாலும் அங் குள்ள நல்லறிஞர்களோடு நட்புக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்படுகின்ற நண்பர்கள் தான் மனக்கவலை ஏற்பட்ட காலத்தில் ஆறுதல் அளிக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர் கள்.

"மகனே, உண்மையான நண்பர்கள் எத்தனை யெத்தனைபேர் இருக்கிறார்களோ, அத்தனைக் கத்தனை ஒருவன் கவலையற்ற வனாக வாழமுடியும்.

"எனவே, மகனே இனிமேலாவது நல்ல நண்பர்களைத் தேடிக்கொள். நண்பர்களின் வீடுகள்தான் உனக்குச் சரியான புகலிடங்கள் ஆகும்" என்று சொல்லி முடித்தார் தந்தை.

அப்பொழுதுதான் மகன் அவருடைய அன்பு உள்ளத்தை மிக நன்றாகப் புரிந்து கொண்டான்.

அவனுடைய எதிர் காலம் சிறப்பாக அமைந்தது.

## பொன்வண்டு வறுவல்

ஒரு பொன் வண்டு, காட்டுப் பாதையில் மகிழ்ச்சியாகப் பாடிக் கொண்டு இருந்தது. அதன் இசை இளங்காற்றில் கலந்து எங்கும் இன்ப ஒலியைப் பரப்பிக் கொண்டிருந்தது.

அவ்வழியாக ஒரு முள்ளம்பன்றி வந்தது. அது நீண்ட நேரமாகப் பட்டினி.

நெடு நேரமாகத் தேடியும் அதற்கு உணவு கிடைக்கவில்லை. பூச்சிகள், வண்டுகள் தாம் அதற்கு உணவு. பொன் வண்டின் இனிய இசையைக் கேட்ட முள்ளம் பன்றி, பாட்டு வந்த திசையை நோக்கி நடந்தது.

முள்ளம் பன்றி வருவதைப் பாராமல் பொன்வண்டு உச்சமான குரலில் பாடிக் கொண்டிருந்தது. அருகில் வந்த முள்ளம் பன்றி சடக்கென்று பொன் வண்டைப் பிடித்துக் கொண்டது.

"அப்பாடா! கடைசியாக நல்ல உணவு கிடைத்தது. பசிக்கவலை விட்டது!" என்று முள்ளம் பன்றி கூறியது.

"என்ன சொல்லுகிறாய்? சரியாகக் கேட்கவில்லையே!" என்று அதன் காலில் சிக்கிக் கொண்ட பொன்வண்டு கேட்டது.

"நன்றாகப் பாடுகிறாய்! ஆனால் தொடர்ந்து உன் பாட்டைக் கேட்க இந்தக் காட்டுக்கு வாய்ப்பு இல்லை. ஏனென்றால் இன்னும் சிறிது நேரத்தில் நீ என் வயிற்றுக் குள் போகப் போகிறாய்!" என்றது முள்ளம் பன்றி.

முட்டாள் தனமாக இந்த முள்ளம்பன்றி யிடம் சிக்கிக் கொண்டோமே என்று வருந்தியது பொன்வண்டு. அதன் மூளையில் ஒரு புது வழி தோன்றியது.

"முள்ளம் பன்றியே, என் இசையைப் பாராட்டியதற்கு நன்றி. அதற்காக நான் உனக்கு ஓர் உதவி செய்ய விரும்புகிறேன்" என்றது பொன் வண்டு.

"ஆ! ஆ! ஆ! என் காலில் சிக்கிக் கொண்டிருக்கும் நீ, இன்னும் ஒரு நொடியில் என் பசியைத் தீர்க்கப் போகும் நீ, எனக்கு உதவி செய்கிறாயா? வேடிக்கைதான்!" என்று பெரிதாகச் சிரித்தது முள்ளம் பன்றி.

"சும்மா சிரிக்காதே! நான் சொல்லுவதைக் கேள்! நீ என் இசையைப் பாராட்டினாய். உன் கையில் அகப்பட்ட நான் எப்படியும் சாகப் போகிறேன். என் சாவு சாதாரணச் சாவாக இருக்கக் கூடாது என்று நான் நினைக்கிறேன். என் இசையைப் பாராட்டிய உனக்கு நான் சுவையான உணவாகிச் சாக விரும்புகிறேன். நீ இவ்வளவு நாளும் பூச்சிகளைப் பிடித்து அப்படியே கடித்துத் தின்றிருக்கிறாய்! அதில் சுவையுமில்லை; இன்பமும் இல்லை. மனிதர்கள் எதையும் வறுத்துத்தான் சாப்பிடுவார்கள். அதுபோல் நீயும் என்னை வறுத்துச் சுவையாகச் சாப்பிட வேண்டும் என்று விரும்புகிறேன்" என்றது பொன் வண்டு.

"அசட்டுப் பொன்வண்டே! நான் எப்படி உன்னை வறுத்துச் சாப்பிட முடியும்? எவனாவது மனிதனிடம் சென்று உன்னை

வறுத்துத்தரச் சொன்னால் அவன் என்னையே வறுத்து விடுவான்” என்றது முள்ளம் பன்றி.

“முள்ளம் பன்றியே! அதோ ஒரு குடிசை தெரிகிறது பார்த்தாயா! அது விறகு வெட்டியின் குடிசை. விறகு வெட்டி இப்போது மரம் வெட்டப் போயிருக்கிறான். அவன் குடிசைக்குச் செல். அங்கே அடுப்பில் இருப்புச் சட்டி இருக்கிறது. அதில் என்னைப் போட்டு வறுத்துச் சாப்பிடு! நான் உனக்குச் சுவையான உணவாகும் மகிழ்ச்சியோடு சாகிறேன். ஒரு முறை வறுத்துச் சாப்பிட்டுப் பழகி விட்டால், பிறகு நீ எதையும் அப்படித்தான் சாப்பிட ஆசைப் படுவாய்!” என்றது பொன் வண்டு.

முள்ளம் பன்றிக்கும் சுவையான சாப்பாடு சாப்பிட ஆசை உண்டாகியது. பொன் வண்டை ஒரு காலில் இடுக்கிப் பிடித்தபடியே விறகுவெட்டியின் குடிசைக்குச் சென்றது! குடிசைக் கதவை இடித்துத், தள்ளிக் கொண்டு உள்ளே சென்றது. அடுப்பின் அருகில் இருப்புச் சட்டி இருந்தது. அதை

எடுத்து அடுப்பின் மேல் வைத்தது. அந்த இருப்புச் சட்டியில் பொன்வண்டைப் போட்டது.

"இனி என்ன செய்ய வேண்டும்?" என்று முள்ளம் பன்றி கேட்டது. அதோ விறகு அடுக்கி வைத்திருக்கிறான். இரண்டு விறகை எடுத்து அடுப்பில் வை. பக்கத்தில் உள்ள அலமாரியில் தீப்பெட்டி இருக்கிறது. அதில் ஒரு குச்சி எடுத்து உரசு. விறகு எரிந்ததும் இருப்புச் சட்டி சுடும், நான் வறுபடுவேன்.

"சிறிது உப்பை எடுத்து என்மேல் தூவி விட்டுத் தின்று பார்! அந்தச் சுவையை நீ மறக்கவே முடியாது" என்றது பொன் வண்டு.

முள்ளம் பன்றி அது சொன்னபடி செய்தது. இரண்டு விறகுகளை எடுத்து அடுப்பில் செருகியது. தீப்பெட்டியை எடுத்து வந்தது. குச்சியை உரசியவுடன் நெருப்பு வந்தது. அதை விறகில் வைத்தது. விறகு தீப்பிடித்து எரிந்தது. சட்டி சுட்டு விட்டதா? என்று தொட்டுப் பார்த்தது. பொன்வண்டு



வறுபட்டு விட்டதா? என்று சட்டியைப் பார்த்தது. அங்கே பொன்வண்டைக் காண வில்லை.

"முள்ளம் பன்றியே! உனக்கு நன்றி. எனக்கு விடுதலை கொடுத்ததற்காக நன்றி நன்றி" என்று கூறிக் கொண்டே திறந்திருந்த கதவு வழியாகப் பறந்து சென்று கொண் டிருந்தது பொன் வண்டு.

ஏமாந்து நின்று கொண்டிருந்த முள்ளம் பன்றி, விறகு வெட்டி குடிசை நோக்கி வருவதைப் பார்த்துவிட்டு, அங்கிருந்து ஓடித் தப்பித்துக் கொண்டது.

## முதல் பரிசு

அண்ணாமலை என்று ஒரு சிறுவன் இருந்தான். அவன் நல்ல கெட்டிக்காரன். பாடம் நன்றாகப் படிப்பான். விளையாட்டு களிலும் சிறந்து விளங்குவான். நல்ல குரல். பாட்டுப் பாடுவதிலும் சிறப்பாகத் திகழ்ந்தான்.

அவனுடைய வீட்டில் எல்லோருமே ஒவ்வொரு வகையில் சிறந்தவர்கள். அப்பா வும் அம்மாவும் கல்லூரிப் பேராசிரியர்கள். இருவருமே மிஞ்சிய நேரத்தில் சமுதாயத் தொண்டு செய்து வந்தார்கள்.

அண்ணாமலையின் அக்கா கல்லூரியில் பொருளாதார வகுப்பில் படித்துக் கொண்டி ருந்தாள். அண்ணன் பொறியியல் கல்லூரி யில் படித்துக் கொண்டிருந்தான்.

படித்த குடும்பம். நல்ல பழக்க வழக்கங்கள். அவர்கள் குடும்பத்தில் எல்லாருமே எதையும் நேரத்தோடு செய்வார்கள். அப்பாவும் அம்மாவும் நிறைய வேலைகள் இருந்தாலும், ஒவ்வொரு வேலையையும் குறித்த குறித்த நேரத்தில் செய்து முடிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். அண்ணனும் அக்காவும் கூடப் பெற்றோரை அப்படியே பின்பற்றினார்கள். அண்ணாமலை மட்டும் விதிவிலக்கு. எதையும் நேரத்தோடு செய்ய மாட்டான்.

"சாப்பிட வா" என்று அம்மா அழைப்பாள்.

"இதோ ஒரு நொடியில் வருகிறேன்" என்று கூறுவான் அண்ணாமலை. சிறிது நேரங்கழித்துத்தான் சாப்பிடச் செல்வான்.

"சீக்கிரம் குளித்து விட்டு வா!" என்பாள் அம்மா.

"இதோ ஒரு நொடியில்" என்று கூறி விட்டுச் சிறிது நேரம் கழித்தே குளிப்பான் அண்ணாமலை.

கடைக்குப் போய் ஏதாவது பொருள் வாங்கி வரச் சொன்னாலும் இப்படித்தான்.

"இதோ ஒரு நொடியில்!" என்று பதில் வரும்.

சிறிது நேரங்கழித்துத்தான் புறப்படுவான்.

"நீ எப்பொழுதுதான் திருந்தப் போகிறாயோ! வேறு எது போனாலும் திரும்பப் பெற்று விடலாம். ஓடிவிட்ட காலத்தைத் திரும்பப் பெற முடியாது. காலத்தோடு செய்ய நீ எப்பொழுது பழகப் போகிறாய்!" என்று வருத்தப் படுவார் அப்பா.

"நீங்கள் சொன்ன வேலையை நான் செய்யவில்லையா? சிறிது நேரங்கழித்துச் செய்வதால் என்ன கெடுதல்?" என்று திருப்பிக் கேட்டான் அண்ணாமலை.

"அப்படியல்ல. காலத்தின் அருமையை நீ ஒரு நாள் உணரத்தான் போகிறாய்" என்று சொன்னார் அப்பா.

அந்த நாள் வந்துவிட்டது.

பள்ளிக் கூடத்தில் ஆண்டு விழா நடந்தது. ஆண்டு விழாவையொட்டி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

அண்ணாமலை எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொண்டான். ஒன்றில் கூட முதல் பரிசு வாங்கவில்லை. ஓட்டப் பந்தயத்திலும், கோணிப்பை ஓட்டத்திலும் இரண்டாவது பரிசு பெற்றான். தடைப்பந்தயத்தில் மூன்றாவது பரிசு பெற்றான்.

விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்ற மறுநாள் ஆண்டு விழா. அன்று பரிசுகள் வழங்கினார்கள். பரிசு வழங்கும் விழாவிற்கு அப்பாவும் அம்மாவும் சென்றிருந்தார்கள். அண்ணாமலை மேடையில் போய் பரிசுகள் வாங்கிக் கொண்டு வந்தான். அப்பாவின் பக்கத்தில் பரிசுக்கோப்பைகளுடன் வந்து உட்கார்ந்தான்.

அப்பாவின் நண்பர் ஒரு பெரியவர். பக்கத்தில் உட்கார்ந்திருந்த அவர் அப்பாவை நோக்கி, "உங்கள் பையன் ஒரு போட்டியிலும் முதல் பரிசு வாங்கவில்லையே, ஏன்?" என்று கேட்டார் அந்தப் பெரியவர்.

"ஒரு நொடி பிந்தி விட்டான். அவ்வளவு தான்" என்றார் அப்பா.

தான் முதல் பரிசு பெறாதது அப்பாவிற்கு எவ்வளவு வருத்தத்தை உண்டாக்கியுள்ளது என்பதை அந்தப் பதிலில் இருந்து தெரிந்து கொண்டான் அண்ணாமலை.

அன்று முதல் எந்த வேலையையும் உடனுக்குடனே செய்யும் வழக்கத்தை மேற் கொண்டான். சிறிது நேரங்கூட வீணாக்காமல் ஒவ்வொரு செயலையும் செய்தான்.

அடுத்த ஆண்டு அவன் தான் முதல் பரிசு வாங்குவான் என்று இப்பொழுதே உறுதியாகச் சொல்லலாம்.

## செல்வ மகன்

நீண்ட நெடுங் காலத்திற்கு முன் குன்றக்குடியில் சங்கரன் என்ற பெரியவர் இருந்தார். சங்கரன் பெரிய பணக்காரர். அவருக்கு வீடு, நிலம், தோட்டம், சொத்து எல்லாம் இருந்தன. ஆனால் ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. அவருடைய ஒரே மகன் கணபதி பெருஞ் சோம்பேறியாக இருந்தது தான் அந்தப் பெரிய குறை.

தன்னிடம் நிறைய சொத்து இருந்தாலும் தன் மகன் கணபதி உழைக்காத சோம்பேறி யாய் இருப்பது சங்கரனுக்குத் துன்பமாய் இருந்தது

"குந்தித் தின்றால் குன்றும் மாளும்" என்று பழமொழி சொல்வார்கள். உழைக்காத சோம்பேறியான தன் மகன் பிற்காலத்தில் தன்

சொத்துக்களைக் காப்பாற்ற முடியாமல், துன்பப் படுவானே என்று நினைத்துப் பார்க்கவே அவருக்கு வருத்தமாய் இருந்தது.

இதே கவலையாய் அவர் நோய் உற்றுப் படுத்துவிட்டார்.

அவரை ஊர்ப் பெரிய மனிதர்கள் பலர் வந்து பார்த்தும் போயினர். அவர் உடம்பை ஆய்ந்து பார்த்த மருத்துவர், அவருக்கு உடல் நோய் எதுவும் இல்லை என்றும், மனநோய் தான் அவரை வருத்துகிறது என்றும் கூறினார். உடனே அந்தப் பெரியவர்கள் அவருடைய மனக்கவலை என்ன என்று கேட்டார்கள். தன் மகனைப் பற்றிய கவலையை அவர் வெளி யிட்டார்.

ஒரு பெரிய மனிதரிடம் அவர் இவ்வாறு கூறினார்.

“ஐயா, என் மகன் சோம்பேறியாய் இருப்பது தான் எனக்குக் கவலையளிக்கிறது. என்றாவது ஒரு நாள் என் மகன் உழைத்துப் பொருள் ஈட்டி ஒரு ஐந்து ரூபாய் கொண்டு

வந்து கொடுத்தால் கூடப் போதும். என் கவலை ஒழிந்து போகும். உழைத்துப் பிழைக்க வேண்டும் என்கின்ற எண்ணம் அவனுக்கு வந்து விட்டது என்று தெரிந்தால்தான் என் கவலை தீரும்" என்றார் சங்கரன்.

இரண்டு நாள்கள் கழித்து அவர் மகன் கணபதி தந்தை படுத்திருக்கும் அறைக்கு வந்தான்.

"அப்பா" என்று குழைவாக அழைத்தான். சங்கரன் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

மகன் கணபதி ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினான். "அப்பா இது என் பணம். நான் உழைத்துத் தேடிய பணம். வைத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினான்.

சங்கரன் அவனை வெறித்து நோக்கினார்.

"ஆம் அப்பா. வயலில் நேற்று நாற்று நட்டேன். அதற்குக் கூலியாகப் பெற்ற பணம் தான் இது. வாங்கிக் கொள்ளுங்கள் அப்பா" என்று மகன் ரூபாய் நோட்டை நீட்டினான்.

சங்கரன் அந்த நோட்டை வாங்கினார்: சுக்கல் சுக்கலாகக் கிழித்தார். குப்பைக் கூடையை நோக்கி வீசினார்.

"நீ சோம்பேறியாக மட்டும் இல்லை; பொய்யனாகவும் மாறி விட்டாய்!" என்று பெருந்துயரத்தோடு கூறினார். அப்படியே மயக்கம் போட்டுச் சாய்ந்து விட்டார். உடனடி யாக மருத்துவருக்கு ஆளனுப்பி, அவருடைய மயக்கத்தைத் தெளிவிக்க ஐம்பது ரூபாய் செலவாயிற்று.

கணபதி அந்த ஐந்து ரூபாயை உழைத்து ஈட்டவில்லை. தன் மாமாவிடம் இலவசமாக வாங்கி வந்தான். அறுவடை செய்ய வேண்டிய காலத்தில் நாற்றுநட்டதாகப்பொய் சொன்னால் தந்தை எப்படி நம்புவார்! அதனால்தான் கிழித்து எறிந்தார்.

சில நாட்கள் கழிந்தன. மீண்டும் கணபதி அப்பாவிடம் வந்தான். அப்போது அவன் கையில் ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது.

"அப்பா, உண்மையில் நான் உழைத்துத் தேடிய பணம் இது. வாங்கிக் கொள்ளுங்கள்" என்று கெஞ்சினான்.

சங்கரன் அவனைக் கூர்ந்து நோக்கினார்.

"கட்டிடங்கட்டும் இடத்தில் செங்கல் தூக்கிக் கொடுத்துக் கூலியாக வாங்கி வந்த பணம் இது" என்றான் கணபதி.

சங்கரன் அந்த நோட்டை வாங்கி அப்படியே கிழித்துக். குப்பையில் போட்டார். உண்மையில் அந்தப் பகுதியில் யாரும் அப்போது கட்டிடம் கட்டவில்லை. தந்தையின் நண்பர் ஒருவரிடம் கணபதி கெஞ்சி வாங்கிய பணம் அது.

"இனி உன்னை நான் நம்ப மாட்டேன். என்னிடம் வராதே" என்று கடுமையாகச் சொன்னார் சங்கரன். இவன் எப்படிப் பிழைக்க போகிறான் என்ற எண்ணமே அவரை மேலும் நோய்க்கு உள்ளாக்கியது.

பத்து நாள் கழித்து மீண்டும் கணபதி சங்கரன் அறைக்கு வந்தான். அப்போது அவர் உடல் நிலை மிகவும் கவலைக் கிடமாய் இருந்தது.

கணபதி கண்களில் நீர் வழிய தந்தையை நோக்கினான். "அப்பா என்னை நம்புங்கள். நான் திருந்திவிட்டேன். இதோ இந்த ஐந்து ரூபாய் நான் உண்மையில் உழைத்துப் பெற்ற பணம்." என்று ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினான்.

வெறுப்போடு சங்கரன் அந்த நோட்டைப் பிடுங்கினார். அதைக் கிழிக்கப் போனார்.

"அப்பா! அப்பா! கிழிக்காதீர்கள்! உங்கள் மகனின் உண்மையான உழைப்பு அது" என்று அவர் கையைப் பற்றினான் கணபதி.


அவன் கைகள் அவரைத் தொட்டவுடன் சங்கரன், அது உண்மையான உழைப்புதான் என்பதைப் புரிந்து கொண்டார். ஏனெனில் கணபதியின் கைகள் காய்த்துப் போயிருந்தன. கல்லுடைத்துக் கல்லுடைத்து அவன் கைகள் காய்த்துப் போயிருந்தன. கைகளால் அவன் தன்னைத் தொட்டவுடன் சங்கரன் அதைப் புரிந்து கொண்டார்.

அந்தக் கைகளை எடுத்துக் கண்களில் ஒத்திக் கொண்டார். "மகனே! நீ திருந்தி

விட்டாய்! இனி நான் மன நிறைவோடு சாவேன்” என்றார்.

ஆனால் உண்மையில் அவர் அப்போது சாகவில்லை. சில நாட்களில் அவர் குணம் அடைந்து விட்டார். நீண்ட நாட்கள் உயிரோடு இருந்தார். மகன் பொறுப்புடன் உழைத்து மேலும் தன் செல்வத்தைப் பெருக்கியதைக் கண்டு மனநிறைவுடன் வாழ்ந்தார்.

கணபதியும் பெரிய மனிதர்கள் பாராட்டும் சிறந்த பிள்ளையாக வளர்ந்து, பெருமையும் செல்வாக்கும் பெற்று விளங்கினான்.



# தமிழாலயம் வெளியீடுகள்

## நாரா நாச்சியப்பன் எழுதியவை

| | | |
|---|---|---|
| 1. | நாச்சியப்பன் பாடல்கள் I | 15-00 |
| 2. | நாச்சியப்பன் பாடல்கள் II | 15-00 |
| 3. | மூன்று திங்களில் அச்சுத்தொழில் | 10-00 |
| 4. | புதுமுறை பஞ்சதந்திரக் கதைகள் | 15-00 |
| 5. | நாயகப் பெருமான் | 4-00 |
| 6. | ஏழாவது வாசல் | 5-00 |
| 7. | அசோகர் கதைகள் | 2-00 |
| 8. | பறவை தந்த பரிசு | 4-00 |
| 9. | மாயத்தை வென்ற மாணவன் | 5-00 |
| 10. | அப்பந் தின்ற முயல் | 5-00 |
| 11. | தாவிப்பாயும் தங்கக் குதிரை | 4-00 |
| 12. | பள்ளிக்குச் சென்ற சிட்டுக் குருவிகள் | 5-00 |
| 13. | குயில் ஒரு குற்றவாளி | 5-00 |
| 14. | பாடுபாப்பா | 4-00 |
| 15. | நான்கு பார்வைகளில் பாரதிதாசன் | 7-00 |
| 16. | பாசமுள்ள நாய்க்குட்டி | 5-00 |
| 17. | மன ஊஞ்சல் (புதினம்) | 25-00 |
| 18. | குயிலும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலும் | 5-00 |
| 19. | என்ன? ஏன்? எப்படி? | 10-00 |
| 20. | கடவுள் பாட்டு | 5-00 |

**தமிழாலயம்: 137, ஜானிஜான் கான் தெரு.**
**சென்னை-600 014.**